## உடபலாத பிரதேச சபை
## கண்டி மாவட்டம்

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 10 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

நிதிக் கூற்றுக்களானவை உடபலாத பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி சார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பத எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான 2015 ஆண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 49,475 இற்கான செலவுக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் கணக்குகளில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டு தொடர்பாக மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 560,232 இற்கான சட்டவரைஞர் கட்டணம் மற்றும் வாகனங்களின் திருத்தச் செலவு மீளாய்வாண்டிற்கான செலவுகள் என கணித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) WPPF-7352 டபள் கப் வண்டியின் 2015 ஆண்டிற்கான காப்புறுதி தவணைப் பணமாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 74,988 தொகை மீளாய்வாண்டிற்கான செலவுகள் என கணித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டின் போது ஹுனுகல விளையாட்டு மைதானம் மற்றும் புத்தர் சிலை அறை அமைந்துள்ள காணியினை அளவை செய்து சபைக்கு உரித்தாக்குவதற்காக மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 13,440 இற்கான அளவைக் கட்டணம் மீளாய்வாண்டிற்கான செலவுகள் என கணித்து கணக்கீடு செய்திருந்ததுடன், அச் செலவினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(உ) அனுமதிப்பத்திரக் கட்டணம் தொடர்பாக நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணம் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. அத்துடன் 2013 மற்றும் 2014 ஆண்டுகள் தொடர்பாக புஸ்ஸல்லாவ உப அலுவலகத்தில் இருந்து மாத்திரம் அறவிடப்பட வேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 205,650 இனை கணக்குகளில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(ஊ) 2011 மற்றும் 2012 ஆண்டுகள் தொடர்பாக செலுத்தப்பட்ட ரூபா 154,560 இற்கான கணக்காய்வுக் கட்டணம் மீளாய்வாண்டிற்கான செலவுகள் என கணித்து கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(எ) 2013 ஜுன் முதல் திசெம்பர் மாதம் வரையான முத்திரைக் கட்டணம் பட்டோலைகள் தயாரித்தல் தொடர்பாக செலுத்தப்பட வேண்டியுள்ள ரூபா 11,525 தொகையினை மீளாய்வாண்டிற்கான செலவுகள் என கணித்து கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

03 கணக்கு விடயங்கள் தொடர்பாக தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 116,036,194 இற்கான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திரகமாக பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவை | |
| விதி 59-66 | மீளாய்வாண்டு ஆரம்பத்தில் வருமான நிருவாகியினால் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் கைத்தொழில் உட்பட வர்த்தகங்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை குடியரசின் தாபனக்கோவை | |
| அத்தியாயம் XXIV | 2010 ஆண்டிற்கு முன்னர் இருந்து காணப்படும் 11 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 136,740 இற்கான கடன் மீதியினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 16,194,657 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 23,911,696 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 7,717,039 இற்கான குறைவு ஒன்று அவதானிக்கப்பட்டது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 வாடகை

(அ) இரண்டு பாதைகளில் அமைந்துள்ள இலக்கம் 01 மற்றும் 02 வர்த்தக நிலையங்கள் நீண்ட காலமாக மூடப்பட்டுக் காணப்பட்டதுடன், அவ் வர்த்தக நிலையங்களை திருத்தி வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 03ஆம் இலக்க வியாபார நிலையம் 2014 ஜூலை மாதம் முதல் மூடப்பட்டுக் காணப்பட்டாமையால் அறவிடப்பட வேண்டிய ரூபா 7,560 இற்கான நிலுவை மீதியை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) தொழுவ பொது வர்த்தக நிலையத்தின் இலக்கம் 07,08,11,12 ஆகிய கடைகள் 2011 ஆண்டு முதல் 2014 ஆண்டுகள் வரை வாடகைக்குக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமையால் கடைகளை வாடகைக்கு கொடுப்பதன் மூலம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 240,000 இற்கான தொகையொன்றினை சபை இழந்துள்ளது.

2.2.2 செலுத்துகை டவருக்காக வாடகை அறவீடு செய்யப்படாமை

வருமான பரிசோதகரின் பௌதீகப் பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் 18 செலுத்துகை டவர்கள் இனங்காணப்பட்டிருந்ததுடன், அந்த டவர்களுக்காக வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும் 2013 மற்றும் 2014 ஆண்டுகள் தொடர்பாக 03 தனியார் நிறுவனங்களில் இருந்து ரூபா 78,200 தொகை ஒன்று கிடைக்க வேண்டும் என கணக்கிடப்பட்டிருந்த போதிலும் பெற வேண்டிய தொகை கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

2.2.3 அறிவித்தல் பலகைக் கட்டணம்

உடபலாத பிரதேச சபை செயலாளரின் 2015 ஜூன் 15 திகதிய கடிதத்தின் பிரகாரம் தனியார் கம்பனி ஒன்றின் மூலம் பொருத்தப்பட்டிருந்த 26 நிரந்தர விளம்பர பலகைகள் தொடர்பாக பெற வேண்டிய ரூபா 103,000 தொகை மற்றும் மேலும் ரூபா 87,150 தொகையினையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.4 காணி குத்தகை

காணி குத்தகை பதிவேட்டின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 24,048 இற்கான நிலுவை மீதி ஒன்று காணப்பட்டது.

2.2.5 நீர்க் கட்டணம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 2,011,055 இற்கான நிலுவை நீர்க் கட்டணம் ஒன்று காணப்பட்டதுடன், அவற்றில் 01 வருட காலத்தை மிகைத்திருந்த மீதிகளின் பெறுமதி ரூபா 1,739,769 ஆக காணப்பட்டது. இந்த நிலுவை தொகையை அறவீடு செய்வதற்காக முறையான நடைமுறை ஒன்று கடைபிடிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நீர் மானி இன்றி 411 நுகர்வு இடங்களுக்காக நீர் வசதிகள் வழங்கப்பட்டிருந் தமையால் சபைக்கு அறவிடக் கூடியதாகவிருந்த வருமானம் வரையறையாகியுள்ளது.

2.2.6 வீட்டு வாடகை

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை வீட்டு வாடகை ரூபா 16,802 ஆக காணப்பட்டதுடன், 2008 நவம்பர் மாத்தில் ஓய்வு பெற்ற அலுவர் ஒருவரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 8,460 இற்கான நிலுவை வாடகையையும் அறவீடு செய்திருக்கவில்லை. இறந்த ஊழியரிடம் 2015 ஜூன் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 15,252 தொகையும் மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

2.2.7 நீதி மன்றத் தண்டப் பணம்

2011 ஆண்டிற்கான பெற வேண்டிய நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 28,250 ஐ 2014 ஆண்டு தொடர்பாக பெற வேண்டிய ரூபா 446,833 வும் மற்றும் மீளாய்வாண்டு செப்டம்பர் முதல் திசெம்பர் வரை கம்பளை காணிப் பதிவாளர் அலுவலகத்தில் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 500,000 இற்கான மதிப்பீட்டு பெறுமதி தொடர்பாக தொகை அறுதியாக கணித்து பெற்றுக்கொள்வதற்காக 2015 ஜூலை வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.8 அனுமதிப் பத்திரக் கட்டணம் மற்றும் வியாபார வரி

அனுமதிப் பத்திர கட்டணம் மற்றும் வியாபார வரி அறவிடப்பட வேண்டிய இடங்கள் தொடர்பாக 2013 மற்றும் 2014 ஆண்டுகளின் போது கணிப்பீடு ஒன்று மூலம் இனங்காண்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அத்துடன் இறுதியாக கணிப்பீடு மேற்கொண்டுள்ள 2012 ஆண்டின் அனுமதிப்பத்திர பதிவேட்டினை அடிப்படையாகக் கொண்டு வரியும் கட்டணமும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

------------------------------------------------------------

(அ) உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ஓய்வூதியப் பங்களிப்புத் தொகை முறைப்படி அனுப்பப்படாமையால் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 2,750,621 இற்கான தொகையொன்று செலுத்த வேண்டியிருந்தது.

(ஆ) பிரதேச சபைகளை வலுப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டிருந்த 5 மில்லியன் ரூபா தொகையில் ரூபா 4,279,126 தொகையொன்று குறிப்பிட்ட நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டிருந்தது.

(இ) 1993 ஆண்டின் போது இடமாற்றம் பெற்றுச் சென்று 2006 ஆண்டில் ஓய்வு பெற்ற வருமானப் பரிசோதகர் சபைக்கு உரித்தான வீட்டில் குடியிருந்ததுடன் அவ் வீட்டை திருப்பி எடுக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) 1987 ஜனவரி 05 திகதிய இலக்கம் கே/857 கொண்ட பொது நிருவாக சுற்று நிருபத்தின் பிரகாரம் அரச வாசஸ்தலங்களுக்காக அறவிடப்படும் பொருளாதார வாடகை வருடாந்தம் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். எனினும், அதன் பிரகாரம் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. சபைக்குச் சொந்தமான 13 வாசஸ்தலங்களுக்காக 2012 ஆண்டின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டதன் பிரகாரம் காணப்பட்ட வாடகையே தற்போதும் அறவீடு செய்யப்படுகின்றது.

3.2 மனித வள முகாமைத்துவம்

----------------------------------------------

உடபலாத பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான ஆளணிக் கோப்பு மீது பரிசோதனை மேற்கொண்ட போது இரண்டாம் மட்டத்தில் வெற்றிடங்கள் 13 மற்றும் ஆரம்ப மட்டத்தில் 06 பதவிகள் 13 வெற்றிடங்களும் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டதுடன் அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. ஆரம்ப சேவையில் நூலக ஊழியர் பதவியில் 02 அலுவலர்கள் மிகையாகக் காணப்பட்டது.

3.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்

-----------------------------------------------------------------------------------------------

ரூபா 115,500 பெறுமதியான 06 டிரக்டர் டயர்கள் மற்றும் பெறுமதியை இனங்காணப்படாத மோட்டார் சைக்கிள் ஒன்று என்பன 2010 ஆண்டு முதல் பயன்படுத்தப்படாமலும் குறை பயன்பாட்டுடனும் காணப்பட்டது.

3.4 முறைசாராக் கொடுக்கல் வாங்கல்கள்

----------------------------------------------------------------

விளையாட்டுத் துறை அபிவிருத்தி அமைச்சில் இருந்து கிடைத்திருந்த நிருவாக செலவுகளில் இருந்து அத் துறையின் அலுவலர்களுக்கு படி செலுத்துவதற்காக 2012 செப்டம்பர் 25 திகதிய பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு மாற்றமாக சபைக்கு கிடைத்திருந்த அனைத்து நிருவாக செலவுகளில் இருந்து ரூபா 326,000 இற்கான தொகையொன்று எதுவித அடிப்படையுமின்றி சபை நிதியத்தில் இருந்து சம்பளம் பெறும் அலவலர்களுக்கு படியாக செலுத்தப்பட்டிருந்தது.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

-----------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிராகரம் மதிப்பீட்டு வருமானங்கள் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது 05 வருமான விடயங்களில் நூற்றிற்கு 19 முதல் நூற்றிற்கு 33 வரையும், 06 செலவு விடயங்களில் நூற்றிற்கு 44 முதல் நூற்றிற்கு நூறினை மிகைத்தும் முரண்கள் அவதானிக்கப்பட்டன. மீளாய்வாண்டின் போது சபையினால் தயாரிக்கப்பட்டிருந்த பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்